**<u>சாட்சியின் வாக்குமூலம்</u>**

**<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>**

**OS.No. 98/2012**

**DW3 : திரு. புன்னை சக்கரவர்த்தி, த/பெ. கோவிந்தராஜ்**

**20.03.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : | வட்டம் | : |
| தந்தை பெயர் | : | தொழில் | : |
| கிராமம் | : | வயது | : |

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

<u>முதல் விசாரணை</u>

நான் பாகல்மேட்டில் வசித்து வருகிறேன். நான் இந்த வழக்கின் 3ஆம் தரப்பினர். நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் இன்றைய தினம் நீதிமன்றத்தில் ஆஜராகிறேன்.

பாகல்மேடு கிராமத்தில் வேணு என்பவர் குடும்பத்தை எனக்கு தெரியும். அவருக்கு சொந்தமான நிலத்தை என் அம்மா பெயரில் அந்த 44 சென்ட்-ஐ கிரையம் பெற்றுள்ளார். அதன் சர்வே எண் 264/1பி ஆகும். அதன் ஆவண எண் 2455/1997 ஆகும். மேற்படி சொத்தை என் தந்தை கோவிந்தராஜ் வேணுவிடமிருந்து வாங்கி என் அம்மா அஞ்சலா பெயரில் எழுதி வைத்தார். அந்த ஆவணம் ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் 21/08/1997 அன்று பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அதேபோல் 1984ல் சர்வே எண் 264/2ஏ அதன் விஸ்தீரனம் 67 சென்ட் ஆவண எண். 315/1984 அதில் என் தந்தை கோவிந்தராஜ் வேணுவிடம் பரிவர்த்தனை பத்திரம் மூலம் மாற்றிக்கொண்டார். அதற்கு பதிலாக என் தந்தையின் சொத்து சர்வே எண் 38/1ல் 23 சென்ட், அதேபோல் சர்வே எண் 39ல் 37 சென்ட் ஆக மொத்தம் 60 சென்ட் நிலம் என் தந்தைக்கு சொந்தமான நிலத்தை வேணுவிற்கு கொடுத்துவிட்டு அதற்கு பதிலாக சர்வே எண் 264/2ஏல் 67 சென்ட் நிலத்தை

வேணுவிடமிருந்து என் தந்தை வாங்கிக்கொண்டார் என்றால் சரிதான். தற்போது மேற்கூறிய 67 சென்ட் மற்றும் என் அம்மாவின் பெயரில் உள்ள 44 சென்ட் இரண்டும் எங்களுடைய அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

1. 21/08/1997 தேதியிட்ட என் தாய் அஞ்சலா சரோஜா மற்றும் தன்ராஜிடமிருந்து வாங்கிய சொத்தின் சர்வே எண் 264/1பி-ன் கிரைய ஆவணம் **பி.வா.த.சா.ஆ.31** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2. 24/11/1984 தேதியிட்ட என் தந்தை கோவிந்தராஜ் (எ) கோபிரெட்டிக்கும் வேணு என்பவருக்கும் இடையேயான சொத்து பரிமாற்ற ஆவணம் **பி.வா.த.சா.ஆ.32** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எனக்கு தற்போது வயது 44 ஆகிறது. கிரையம் பத்திரங்கள் வாங்கியபோது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் என் அம்மா பெயரில் வாங்கியது மட்டும் தெரியும். அம்மா யார் யாரிடமிருந்து சொத்தை வாங்கினார் என்றால் சரோஜாம்மாள் மற்றும் வேணுவிடமிருந்து வாங்கினார். மேற்படி சொத்தை சரோஜாம்மாள் மற்றும் தன்ராஜிடமிருந்து தான் என் தாயார் வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்து கூட்டுகுடும்ப சொத்து என்றாலும் பி.வா.த.சா.ஆ.31 மூலம் எந்த ஒரு சொத்துரிமை மாற்றம் நிகழவில்லை என்றால் சரியல்ல. சான்றிட்ட நகலை எவ்வாறு பெற்றேன் என்றால் ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றேன். எதற்காக சான்றிட்ட நகல் வாங்கினேன் என்றால் என் அம்மா பெயரில் பட்டா மாற்றம் செய்வதற்காக வாங்கினேன். பி.வா.த.சா.ஆ.32 கூட்டுகுடும்ப சொத்து வேணுவிடம் மட்டும் வாங்கியிருப்பதால் மேற்படி பத்திரமும் எந்த உரிமை மாற்றத்திற்கும் உட்பட்டதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கின் சங்கதிகளை நீதிமன்றத்திற்கு வந்த பிறகு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். இந்த வழக்கில் எனக்கு கொடுக்கப்பட்ட சொத்தில் வாதிகள் பாகம் வேண்டும் என்று வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பத்திரங்கள் எப்போது ஏற்பட்டது என்று நேரடியாக தெரியாததால் என்றால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் அம்மா பெயரில் எழுதப்பட்டது மட்டும் எனக்கு தெரியும்.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.